Registered as a Newspaper

ஒறிஜினல் China
மோட்டாரில்
இணைக்கப்பட்ட
சொலிட்
பம்புகளையே
வாங்குங்கள்
சகல முன்னணி
எலெற்றிக்கல்
கடைகளிலும் கிடைக்கும்

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை
ரூ. 1-25

● துருப்பிடிக்காத
திருப்பினுலான அச்சு
● சக்தியம் கூடிய நீரில் நீண்டகாலம் பாவிப்பதற்கு விசேடமாக ... செய்யப்பட்ட ஜேர்மன் வட்டர்சில்
● பித்தளையினுலான பம்பி
● பம்பின் செயற்பாட்டிற்கு ஒரு வருட உத்தரவாதம்
சொலிட் பம்ப்

கடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஹூ ஆடி மீ 25 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 14 (10 – 08 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 219

## நாடாளுமன்றத்தில்

# ஒப்பந்தத்தை சமர்ப்பிப்பதற்கு முன்

# அரசமைப்பைத் திருத்த வேண்டும்

### அரசு எதிர்நோக்கும் பெரும் 'கண்டம்'!

கொழும்பு, ஆகஸ்ட் 10

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர், அரசமைப்புச் சட்டத்தை அதற்கேற்ற விதத்தில் திருத்தவேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது.

அரசமைப்புக்குள் அடங்காத பல விடயங்கள் ஒப்பந்தத்தில் உள்ளன ஆகையால் அவற்றைச் சட்டமாக்குவதற்கு முன்னர் அரசமைப்பைத் திருத்தவேண்டும். இல்லையேல் ஒப்பந்தச் சட்டத்தையும், அதன்கீழ் இயற்றப்படும் உப சட்டங்களையும் நிறைவேற்ற உயர் நீதிமன்றம் அனுமதி அளிக்காது —இப்படி சட்டமா அதிபர் திணைக்களம் அரசுக்கு எடுத்துக் கூறியுள்ளதாக அறியவருகிறது.

இதைத் தொடர்ந்து ஒப்பந்தத்தை உள்ளடக்கிய நகல் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னரே அரசாங்கம் பெரிய ''கண்டம்'' ஒன்றை எதிர்நோக்கவேண்டியிருக்கும் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதானல், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம். அது இல்லையேல் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

ஆளும் கட்சி எம். பிக்கள் பலர் இலங்கை– இந்திய ஒப்பந்தத்துக்கு எதிராக உள்ளனர். ஒப்பந்தத்துக்கு ஏற்ற விதத்தில் அரசமைப்பைத் திருத்துவதற்கு ஆதரவாக அவர்கள் வாக்களிப்பார்களா என்பது

(4ஆம் பக்கம் பார்க்க)

### தொண்டமானாறு முகாம் இடம் மாறும்

வடமராட்சி, ஆக 10

தொண்டமானாறு இராணுவ முகாம் இடம்மாற இருக்கிறது என இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போதைய முகாமுக்குப் பதிலாக முன்பு தொண்டமானாறு கடற்கரைப் பகுதியில் குடியேற்றத்திற்கு அண்மையில் இருந்த இராணுவ முகாமில் மீண்டும் இந்திய இராணுவம் முகாம் அமைக்கும என அவர் தெரிவித்தார். (உ-160)

### நாடாளுமன்றம் கூடும்வேளை
## பிக்குமார் வேடத்தில் கொழும்பில் அணிதிரள பெரும் திட்டம்!

கொழும்பு, ஆக 10

இம்மாதம் 18 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது பௌத்த பிக்குகள் என்ற போர்வையில் அரசுக்கு விரோதமான பலர் கொழும்புக்குள் அணிதிரளத் திட்டமிட்டிருக்கின்றனர்.

—இப்படித் தகவல் கிடைத்திருப்பதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மைக் காலத்தில் பெரும் எண்ணிக்கையில் மஞ்சள் அங்கிகள் விற்கப்பட்டுள்ளன என்று பொலீஸ் மா அதிபர் தெரிவித்திருக்கின்றார்.

மேற்படி தகவலை அடுத்து பாதுகாப்புப் படையினர் கேட்கும் போது பௌத்த மதகுருமார்களும் அடையாளக் கார்ட் காட்டவேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதற்கு ஏதுவாக அடையாளக் கார்ட்டுகளைக் கையோடு கொண்டு செல்லும்படி பௌத்த மத குருமார்களுக்கு அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது. (உ-எ)

### ஹெலியில் சென்றனர்

யாழ்ப்பாணம், ஆக 10

பூஸா முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டு கப்பல் மூலம் திருமலை வந்து சேர்ந்த தமிழர்களைச் சந்திப்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்கள் மாத்தயா, யோகி ஆகியோர் நேற்று ஹெலிக்கொப்டர் மூலம் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (உ – 7)

### சுபநேரம்

10-8-1987
திங்கட்கிழமை
சுபநேரம்:–
12.04 முதல் 1.34 வரை
ராகுகாலம்:–
07.34 முதல் 09.04 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# போராளிகள் புனர்வாழ்வுக்கு
# நூறுகோடி ரூபா நிதி ஒதுக்கீடு

### மேலும் நிதி வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 10

தமிழ் போராளிகளின் புனர்வாழ்வுக்கென இந்திய அரசும், இலங்கை அரசும் இணைந்து நூறு கோடி ரூபாவை முதற் கட்டமாக செலவிடவுள்ளன.

இத்தகவலை திரு. ஹர்கீர்த்சிங் நேற்று பலாலியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

போராளிகள் புனர்வாழ்வுக்கு என பல திட்டங்களைக் கொண்ட ஒப்பந்தம் ஒன்றும் இலங்கை—இந்திய அதிகாரிகளுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

போராட்ட காலங்களில் இறந்த போராளிகளின் குடும்பங்களுக்கு இந்த நிதியில் இருந்து உதவி அளிக்கப்படும்.

போராளிகள் ஆயுதங்கள் ஒப்படைக்கும் வேலை முடிவடைந்த கையோடு புனர் வாழ்வு நடவடிக்கைகள் செயற்படுத்தப்படும்.

புனர்வாழ்வுக்கென மேலும் பெரும நிதி ஒதுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (உ-10)

### அறிவித்தல்

ஷப்ரு யுனிக்கோ பினன்ஸ் லிமிட்.

எமது நிதி நிறுவனம் இம் மாதம் பத்தாம் திகதி (10-8-1987) திங்கட்கிழமை முதல் பழைய இடத்துக்கு (207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்) இடம் மாற்றம் செய்யப்படுகின்றது.

இதனை எமது வாடிக்கையாளர், நலன்விரும்புவோர் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

— நிர்வாகத்தினர்

### நோர்வே நாட்டு செஞ்சிலுவைக் குழு இன்று யாழ் நகரில்

யாழ்ப்பாணம், ஆக 10

நோர்வே செஞ்சிலுவைச் சங்கச் செயலாளர் நாயகம் திரு. ஒட் கிரூனும் அவரது குழுவினரும் இன்றுகாலை யாழ் குடாநாட்டுக்கு விஜயம் செய்கின்றனர்.

இவருடன் ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. பந்துல அபயசேகராவும் வருகின்றார்.

இவர்களை யாழ்/செஞ்சிலுவைச் சங்கத்தினர்

(4ஆம் பக்கம் பார்க்க)

### விடுதலையான 291 பேர் வீடுகளுக்கு திரும்பினர்
## இன்று 900 பேர் வருவர்

யாழ்ப்பாணம், ஆக.10

பூஸா இராணுவ முகாமில் இருந்து விடுதலையான 291 பேரும் தம் சொந்த இடங்களுக்கு கப்பலல் நேற்று வந்து சேர்ந்தனர்.

திருகோணமலையைச் சேர்ந்த 169 பேரும் மட்டக்களப்பைச் சேர்ந்த 104 பேரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 11 பேரும் ஏனைய இடங்களைச் சேர்ந்த 7 பேரும் நேற்று விடுதலையானர்கள்.

இதேவேளை விடுதலையான மேலும் 900 பேரை ஏற்றிக் கொண்டு ஐந்து கப்பல்கள் காங்கேசன் துறைமுகத்தை இன்று வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ–10)

### முச்சந்தி முரளி



தெற்கிலை அது ஒண்டு சுகமான அலுவல்தான்! மஞ்சள் அங்கியை போட்டதும் எங்கை போகவும் அனுமதி கிடைத்துவிடும்......!!

# வடக்கு, கிழக்கில் நேற்று முழு அளவில் ஹர்த்தால்

யாழ்ப்பாணம், ஆக. 10

வடக்கு–கிழக்கு பகுதி எங்கும் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. ஹர்த்தாலினல் தமிழ்ப் பிரதேசங்கள் முற்ருக அடங்கிப் போயின.

ஸ்ரீ லங்கா அரச படையினர் மீண்டும் தமிழ்ப் பகுதிகளில் நடத்திவரும் இராணுவக் கெடுபிடிகளைக் கண்டித்தும்—

பூநகரிப் பகுதியில் இரண்டு ஈரோஸ் போராளிகள் இராணுவத்தால் வெட்டிக் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஹர்த்தாலை ஒட்டி. வீதிகளில் ஆங்காங்கே தடைகள் ஏற்படுத்தப்பட்டும் இருந்தன.

இந்திய இராணுவத்தினரின் வாகனங்கள் மட்டுமே நேற்று யாழ் நகர வீதிகளில் ஓடித்திரிந்தன.

சந்தைகள் எதுவும் கூடவில்லை, கடைகள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டிருந்தன.

வாகனப் போக்குவரத்துகளும் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

யாழ் நகரப் பகுதியும் நேற்று வெறிச்சோடிக் காணப்பட்டது. (உ–10)

# 18ஆம் திகதிக்கு முன்னர் ஆயுதஒப்படைப்பு பூர்த்தி

கொழும்பு, ஆக. 10

தமிழ்ப் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்கும் நடவடிக்கை இம்மாதம் 18ஆம் திகதி நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னர் முடிவடைந்து விட வேண்டும்.

இந்திய மேஜர் ஜெனரல் ஹர்கீர்த்சிங் இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

தமிழ்ப் போராளிகள் இதுவரை ஒப்படைத்த ஆயுதங்களின் எண்ணிக்கை அதிகமில்லை எனினும் 18 ஆம் திகதிக்கு முன்னர் விரைவாக அவர்கள் ஆயுதங்களை ஒப்படைத்து விட வேண்டும்.

– இப்படி அவர் மேலும் கூறினர் (உ-எ)

## ★ பலாலி ★ புலோலி ★ கோட்டை ★ மின்னேரியா ★ திருகோணமலை
# 5 இடங்களில் நேற்று ஆயுதங்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 10

யாழ் கோட்டை, பலாலி, புலோலி, மின்னேரியா ஆகிய இராணுவ முகாம்களில் நேற்று விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களை ஒப்படைத்தனர்.

இதேவேளை திருகோணமலையிலும் நேற்று 25 ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டதாக இந்திய மேஜர் ஜெனரல் ஹர்கீர்த்சிங் தெரிவித்தார்.

பலாலியில் இந்திய இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இந்திய இராணுவ உயரதிகாரி திரு. ஹர்கீர்த்சிங்கும் ஆயுத ஒப்படைப்புகளை மேற்

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஊர்காவலர் தாக்குதலை ஆட்சேபித்து திருமலையில்
## நேற்று முன்தினம் ஹர்த்தால்

யாழ்ப்பாணம், ஆக 10

திருகோணமலையில் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) ஹர்த்தால் நடத்தப்பட்டது.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து வெற்றி விழாக் கொண்டாடிய தமிழர் மீது ஊர்காவல் படையினர் நடத்திய தாக்குதலைக் கண்டித்து இந்த ஹர்த்தால் நடத்தப்பட்டது

இச்சம்பவத்தில் ஊர் காவல் படையினர் துப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வல்வை முகாமில் பொலீஸ் நிலையம்

வல்வை இராணுவ முகாமின் ஒரு பகுதியில் வல்வைப் பொலீஸ் நிலையம் ஆரம்பிக்கப்பட இருப்பதாக இந்திய இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன் நிர்வாகப் முழுவதும் இந்தியப் படையினரிடம் வழங்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார் (உ-160)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★
★சின்னஞ் சிறு★
★ விளம்பரம் ★
★★★★★★★★★

அறிவித்தல்

ராஜன் புத்தகசாலை மீண்டும் தனது பழைய இடத்துக்கு இடம் மாறி விட்டது என்பதை வாடிக்கையாளர் அனைவருக்கும் தெரியப்படுத்துகிறோம். ராஜன் புத்தகசாலை, 12, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். சகலவிதமான இலங்கை, இந்திய வார மாத சஞ்சிகைகளும் புத்தகங்களும் பெறலாம். (1458)

## தேவை

எந்தத் துறை பற்றியும் விவாதிக்கக்கூடிய நண்பர், நண்பிகள் தேவை. விண்ணப்பிக்கவும் உங்களைப்பற்றிய முழு விவரங்களுடன். முகவரி:- க. உதயசங்கர், கந்தசாமி கோயில் ரோட், வவுனியா. (1399)

## பண்டத்தரிப்பு ப. நோ கூ. ச. விசேஷகூட்டம்

பண்டத்தரிப்பு, ஆக. 10

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேஷ பொதுக் கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி கூட்டப்படுகின்றது.

யாழ்ப்பாணகூட்டுறவு அபிவிருத்திஆணையாளர் திரு. எஸ். ஜெசநாதன் தமக்குள்ள அதிகாரத்திற்கமைய இக்கூட்டத்தை ஏற்பாடு செய்ய சங்கத்தைப்பணித்துள்ளதாக அறிய வருகின்றது. (இ-120)

## மழைக்கு லொறியின் கீழ் ஒதுங்கியவர் பலி!

யாழ்ப்பாணம், ஆக 10

மழைக்கு லொறியின் கீழ் ஒதுங்கி இருந்த இளைஞர் ஒருவர் அந்த லொறியில் நசுங்குண்டு மரணமானார்.

சனிக்கிழமை இடைக்காட்டில் இந்தச் சம்பவம் நடந்தது.

இறந்தவரின் பெயர் பி. மயில்வாகனம் வயது 26.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

நேற்று இடைக்காடு வெங்காயத் தோட்டம் ஒன்றில் வெங்காயம் ஏற்றுவதற்காக லொறி ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது.

வெங்காயம் ஏற்றிய பின் லொறி புறப்படும் தருணத்தில் மழை பெய்யத்தொடங்கியது

அனைவரும் லொறியின் கீழ் ஒதுங்கிக்கொண்டனர். மழைவிட்டபின் அனைவரும் லொறியின் கூரையில் ஏறிக்கொண்டிருக்கும்போது லொறி புறப்பட்டது.

துரதிர்ஷ்டவசமாக மயில்வாகனம் லொறியின்கீழ் இருக்கும் போதே லொறி புறப்பட்டதால் அவர் சில்லுக்குள் சிக்குண்டு மரணமானார் (இ-ஒ-10)

## மின்வெட்டு

கொழும்பு, ஆக.10

மின்வெட்டு அடுத்தவாரம் முதல் அமுலுக்கு வரும் என்று அரசு நேற்று அறிவித்தது.

நீர்த்தேக்கங்களில் வரட்சி நிலவுவதால் மின்வெட்டு கொண்டுவரப்படுவதாக அரசு காரணம் தெரிவித்தது.

இரவு நேரங்களில் மின்வெட்டு இருக்காது என்றும் அறிவிக்ப்பட்டது. (இ-எ)

# கைத்தொழில் நிலையங்கள், அலுவலகங்கள்

# யாழ். நகரில் இருந்து இடம் மாற்றப்படும்

## ஆணையாளர் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஆக.10

யாழ். மாநகரப் பகுதியிலிருந்து கைத்தொழில் ஸ்தாபனங்களையும், அலுவலகங்களையும் வேறு இடங்களுக்கு மாற்றியமைக்கத் தீர்மானிக்கப் பட்டிருப்பதாக யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் அறிவித்திருக்கின்றார்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையின் விவரம் வருமாறு:

நாட்டு நிலைமை சுமுகமடையத் தொடங்கியதையடுத்து, யாழ் மாநகரத்தின் நகர்ப்புற மையப்பகுதிகளில் மிக வேகமான திருத்த வேலைகளும் அமைப்பு வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

எமது நகரம் இதுவரையில் ஒரு திட்டமிடப்படாத நகரம் என்பதைக் கவனத்திற்கொண்டு தற்போதைய சூழ்நிலையில் ஒரு திட்டமொன்று வகுக்கப்பட்டு அதனடிப்படையில் சில ஒழுங்குகள்நடைமுறைப் படுத்தப்பட வேண்டியது அவசியம்.

எனினும் தற்போது முன்பு போலவே தாறுமாறானவகையில் போக்குவரத்துகளும், கண்டகண்ட இடங்களில் அங்காடி வியாபாரங்களும் அமைக்கப்படுவது மட்டுமல்லாமல், கட்டிடங்களும் விதிமுறைகளுக்கு மாறாக புனரமைக்கப்பட்டும் திருத்தியமைக்கப்பட்டும் வருகின்றன.

எல்லா கட்டிட அமைப்புக்களுக்கும், புனரமைப்புகளுக்கும் எமது முன் அங்கீகாரம் பெற வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன்

நகர அமைப்பு பற்றி ஆலோசிப்பதற்கு ஒரு குழு உடனடியாகச் செயற்பட இருக்கின்றது.

அதுவரையிலும் நகர மையப்புறத்தில் மோட்டார் வாகன வேலைத்தளங்கள் கைத்தொழில் வேலைத்தளங்கள் போன்ற ஸ்தாபனங்களை அனுமதிப்பதில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

இதுவரை அப்படியான ஸ்தாபனங்களை நடத்தி வந்தவர்கள் நகரின் ஏனைய பகுதிகளுக்கு அந்தந்த ஸ்தாபனங்களை மாற்றியமைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இதற்கு முரணாக அமைக்கப்படும் ஸ்தாபனங்களுக்கு மாநகராட்சி மன்றத்தின் சகல சேவைகளும் நிராகரிக்கப்படுவதுடன், அவற்றுக்கெதிராக எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

போக்குவரத்து மொத்தவிற்பனவு, சில்லறை விற்பனவு, கைத்தொழில்கள், தியேட்டர்கள் போன்ற ஸ்தாபனங்களும் இந்த இடத்திலேயே அமைக்கப்படுவது, திட்டமிடல் கோணத்திலிருந்து ஏற்றுக் கொள்ள முடியாதது.

எனவே இப்பகுதியில் சில்லறை,மொத்த வியாபாரங்களைத் தொடர்ந்து இருக்கஅனுமதித்து, கைத்தொழில ஸ்தாபனங்களையும் அலுவலகங்களையும் இந்த இடங்களிலிருந்து, மாநகரத்தின் வேறு பகுதிகளுக்கு மாற்றியமைக்க வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டுள்ளது.

கட்டிடங்கள் அமைப்போர், புனருத்தாரணம் செய்வோர், ஏற்கனவே குறுகிய வீதியில் இன்னும் போக்குவரத்துக்கு தேவையான வீதிகளின் பகுதியில் அத்துமீறி அமைப்பதும், திருத்தி அமைப்பதும் மிகவும் வேதனை அளிக்கக் கூடியதாக இருக்கின்றது.

நவீன சந்தை, மற்றும் சந்தைக் கடைகள் மரக்கறிச் சந்தை, மீன்சந்தைகள் போன்றவற்றை, அவற்றின் நட்டங்களைப் பரிசீலித்து திருத்தி அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

அவ்விடங்களில் முன்பு வர்த்தகம் செய்தவர்களுக்கு இவற்றைத் திருத்திய பின்பு இடங்கள் வழங்கப்படும்.

அதுவரை மரக்கறிச் சந்தை, மீன் சந்தை போன்ற இடங்களில் வர்த்தகம் செய்தவர்கள் அந்த இடங்களில் சென்று குடி கொள்ள வேண்டாம்.

இதேபோன்று அங்காடி வியாபாரிகள் நகரில் போக்குவரத்தையும் ஒழுங்கு முறைகளையும் பாதிக்கக்கூடிய முறையில் மீண்டும் வியாபாரத்தையும் ஆரம்பித்துள்ளனர்.

இவர்களுக்கு எதிராக திடமான நடவடிக்கை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அப்போது அவர்கள் அந்தந்த இடங்களை விட்டு வெளியேற்றப்படுவார்கள்,

—இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## தூர்க்கப்படும் பதுங்கு குழிகள்

குருநகர், ஆக 10

குடாநாட்டில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண அமைதி நிலையை அடுத்து சில மாதங்களுக்கு முன்பு ஒவ்வொரு வீடுகளிலும் அமைக்கப்பட்ட பதுங்கு குழிகள் தற்போது தூர்க்கப்பட்டு வருகின்றன. (உ-51)

## ஆடு, மாடுகளின் எலும்புகளும் கோழி இறகுகளும்

வடமராட்சியில் இடம்பெயர்ந்து சென்றவர்களின் வீடுகளில் ஆடுமாடுகளின் எலும்புகளும் கோழி இறகுகளுமே காணப்படுகின்றனவாம்

இராணுவக் கெடுபிடி காரணமாக இடம்பெயர்ந்த வடமராட்சி மக்கள் மீண்டும் தற்போது தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்ப ஆரம்பித்து உள்ளனர். வீடு திரும்புவோரே தமது வீடுகளில் இப்படியான காட்சிகளைக் காணமுடிகிறது. (இ-160)

இளிநொச்சியில்

## கால் ஊனமுற்ற 12 பேருக்கு சைக்கிள்

இளிநொச்சி, ஆக 10

இளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கால் ஊனமுற்ற 12 பேருக்கு இலவசமாக மூன்று சில்லு சைக்கிள்கள் வழங்கப் பட்டன.

அண்மையில் இளிநொச்சிக் கச்சேரியில் வைத்து இளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆறு பேரும், பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில மூன்று பேரும், பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூன்று பேரும் சைக்கிள்களைப் பெற்றுக் கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் கே. தேவசிகாமணி கால் ஊன முற்றவர்களுக்கான சைக்கிள்களை வழங்கினார்.

வலுவற்ற,நடக்க முடியாத, தொழிலைத் தேடக் கூடியவர்களுக்கென சமூக சேவைத் திணைக்களத்தால் இந்த சைக்கிள்கள் வழங்கப் பட்டிருந்தன. (இ-76)

# வயாவிளான் பகுதியில் 185 வீடுகள் தரைமட்டம்

யாழ்ப்பாணம், ஆக 10

வயாவிளான் பகுதியில் 1·5 வீடுகள் தரைமட்டமாகி உள்ளன மேலும் பல நூற்றுக்கணக்கான வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

வயாவிளான் பகுதியில் இராணுவ கெடுபிடிகளால் வெளியேறிய மக்களில் 25 வீதமான மக்கள் தத்தமது வீடுகளுக்குத் திரும்பிவிட்டனர்.

மேலும் பலர் தமது வீடுகளுக்குத் திரும்பிய வண்ணமுள்ளனர்.

இவர்களில் பலரின் வீடுகள் வசிக்கமுடியாத அளவில் சேதமடைந்துள்ளதனல் இவர்களின் வதிவிடம் பெரும் பிரச்சினையாகி உள்ளது

இவ்வாறு கஷ்டப்படுவோருக்கு வதிவிடங்களை அமைத்துக் கொடுக்க வயாவிளான் பிரசைகள் குழு முயற்சிகளை எடுத்து வருவதாகத் தெரிகிறது.

இதே வேளை தோலகட்டி ஆச்சிரமமும் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-7)

## சாவகச்சேரியில் 16 நாள் பாதயாத்திரை

சாவகச்சேரி. ஆக 10

சாவகச்சேரித் தொகுதியில் உள்ள 160 சைவ ஆலயங்களைச் சென்றடையும் வகையில் 16 நாள் பாதயாத்திரை இம்மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கிறது.

ஆத்மஜோதி ஆசிரியர் சிவத்திரு நா. முத்தையா இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் கோவிலில் இப்பாத யாத்திரையை உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை ஆரம்பித்துவைப்பார்.

35 கிராம சேவகர்கள் பிரிவுகளிலும் உள்ள கிராம சேவகர்கள் பாத யாத்திரைக் குழுவினரை வரவேற்று உபசரிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வர்.

சாவகச்சேரி சைவ மகா சபை, திவ்யஜீவன சங்கம், சைவவட்டம்; மக்கள் ஒன்றியம் ஆகியவை இந்த நடை பஜனையில் பங்குபற்றிச் சிறப்பிக்கும் எனத் தெரிய வருகிறது. (இ-31)

## ● எடுக்காத கடனுக்கு சம்பளத்தில் கழிவு

பண்டத்தரிப்பு, ஆக. 10

சுகாதார திணைக்களத்தில் கடன் பெறுத ஊழியர் சிலரின் சம்பளப் பட்டியலில் "கடன் பணம்" கழிக்கப் பட்டுள்ளதாம்.

இந்த மர்மம் புரியாது ஊழியர்கள் விழிக்கின்றனர்.

அதேவேளை உயர் அதிகாரிகள், அலுவலக ஊழியர்கள் போன்றோருக்கு பல மாதங்களுக்கு முன்னரே கடன் வழங்கப்பட்டு விட்டதாக சிறு பேர் தெரிவிக்கின்றனர். (இ-ஒ-120)

## இன்று முதல் நிவாரணம்

யாழ்ப்பாணம். ஆக 10

யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள குருநகர், யாழ்ப்பாண நகரம், வண்ணார்பண்ணை தென்மேற்கு, வண்ணார் பண்ணை தென்கிழக்கு, சோனகதெரு ஆகிய கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் வசிப்பவர்கள் இந்திய நிவாரணப் பங்கீட்டுப் பொருள்களை முன்பு அவர்கள் அரச நிவாரணப் பொருள்களைப் பெற்றுக்கொண்ட பலநோக்குக் கூட்டுறவுக் கிளைகளில் இன்று முதல் 17 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இப்படி யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகர் கேட்டுள்ளார்.

சுண்டிக்குளி, கொழும்புத்துறை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் வசிப்பவர்களுக்கு இந்திய நிவாரணப் பங்கீட்டுப் பொருள்கள் வழங்கும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும். (உ)

## அமைதி ஞாயிறு

கொழும்பு, ஆக. 10

எதிர்வரும் 16ஆம் திகதியை 'அமைதி ஞாயிறு' ஆக அனுஷ்டிக்கும்படி கொழும்பு பிஷப் மேதகு ஜேபஸ்ஞானப்பிரகாசம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். (இ-எ)

## ஊர்காவற்றுறை கொத்தணி

யாழ்ப்பாணம், ஆக. 10

கடந்த முதலாம்திகதி தொடக்கம் பின்வரும் பாடசாலைகள் ஊர்காவற்றுறை கொத்தணியின் கீழ் புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் திரு. ஏ. எஸ். ஈ. இரத்தினராஜா தலைமையில் இயங்கி வருகின்றன.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை றோ.க. ஆண்கள் பாடசாலை, ஊர்காவற்றுறை சென் மேரிஸ் பெண்கள் வித்தியாலயம், கரம்பன் சண்முகநாத மகா வித்தியாலயம், பருத்தியடைப்பு சதிரேசன் பாடசாலை, கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயம், கரம்பன் சிவகுருநாத வித்தியாலயம், மெலிஞ்சிமுனை றோ. க. பாடசாலை, நாரந்தனைறோ க. மகா வித்தியாலயம், நாரந்தனை கணேசா வித்தியாலயம், தம்பாட்டி அரசினர் பாடசாலை (இ)

## மருத்துவ பீடத்தில் வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஆக. 10

இரண்டாம் வருட உதவி மருத்துவ மாணவர்களுக்காக இதுவரை மந்திகை ஆதார வைத்தியசாலையில் நடைபெற்ற வகுப்புக்கள் கடந்த 27ஆம் திகதி முதல் யாழ்ப்பாணமருத்துவ பீடத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. (இ)


## ஆள் தேவை

குளிரூட்டப்பட்ட வீடியோ கிளப்பிற்கு ஒரு பெண்பிள்ளை தேவை. நடுத்தர வயதுடைய அழகுள்ளவரும் வியாபாரம் செய்யக் கூடிய தன்மையும் உடையவராக இருத்தல் விரும்பத்தக்கது. தங்குமிட வசதியுள்ளவர்கள் நல்லது அப்படி இல்லாதவர்களுக்கும் ஒழுங்கு செய்யலாம். பொறுப்புக்கள் இல்லாதவர்கள் நன்று விண்ணப்பதாரிகள் கடிதமூலமோ, நேரிலோ தொடர்பு கொள்ளலாம்.

ஷோபனுஸ் வீடியோ சென்டர்
கந்தசுவாமி கோவில் வீதி, வவுனியா.

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ அவுஸ்திரேலியா
நாட்டிற்கு விசா, பிரயாணச்சீட்டு உடனடியாக ஒழுங்கு செய்து தரப்படும்.
★ சிங்கப்பூரில் கட்டிடக் கூலி வேலை
★ சிங்கப்பூரில் பணிப்பெண்கள் உடன் தேவை
6 பாஸ்போட் படமும், ஒரு முழுப்படத்துடனும்
● நேரில் தொடர்பு கொள்ளவும் ●
★ பாஸ்போட் ★ பொண்ட்
★ பிரயாணச்சீட்டுக்கள் ★ இந்தியன் விசா
★ Confirmation Reconfirmation ★
பாஸ்போட் புதுப்பித்தல்
● வெளிநாட்டு தந்திசேவைகள், ரெலெக்ஸ் சேவைகள் ●
தொடர்பு கொள்ள வேண்டிய இடம்
நிப்பொன் ரெலிரவல்ஸ்
(பிறைவேற் லிமிட்டெட்)
No. 2, G ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


## பிறந்த நாள் ★ வாழ்த்து ★



★ அடம் கமல்ரன் ★
(Adam Hamalton)

ஜேர்மனியில் இருக்கும் தவக்குமார் நளாயினி தம்பதிகளின் ஏக புதல்வன் Adam Hamalton (அடம் கமல்ரன்) தனது முதலாவது பிறந்த தினத்தை 02-08-87 அன்று வெகு குதூகலமாக ஜேர்மனியில் கொண்டாடினார்.

இவரை அப்பா, அம்மா, ஜேர்மனி பிறேம் சித்தப்பா, தயாச்சித்தப்பா சென்னை ருஜூசித்தப்பா, வவுனியா ரேய்சித்தப்பா, ஜெயாச்சித்தி, செல்வி மாமி, அப்பம்மா, அராலி அம்மம்மா, கலாச்சித்தி, பிரான்ஸ் ரஞ்சன்மாமா. ராஜன்மாமா ஆகியோர்; (Adam Hamalton) இயேசுவின் இனிய நாமத்தில் சகல கலைகளும் பெற்று சீரும் சிறப்புமாகப் பல்லாண்டு காலம் வாழ, வாழ்த்துகிறார்கள்.


## தேவை

மனேச்சர்/உணவு பரிமாறுபவர்கள்

★ சைவ உணவகம் நடத்துவதிலும், வேலையாட்களைக் கொண்டு நடத்துவதிலும், பண்பான முறையில் நடந்து கொள்ளக் கூடியவரும், குடும்பப் பொறுப்புகள் அதிகளவு இல்லாத ஒருவர் மனேச்சராகத் தேவை. வேலைக்காகத் தொடர்பு கொள்ளும்போது சிபார்சுக்கடிதம் இணைத்துக்கொள்ளவும்.

★ தரமான பண்பான முறையில் உணவு பரிமாறும் சிப்பந்திகளும் தேவை. லீவுகள் எடுக்காது வேலையில் அக்கறையுள்ளவர்கள் தொடர்புகொள்ளுங்கள். சம்பளம் 750/-க்கு மேல். சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

★ (திறமைக்கேற்ப சம்பளம்கூட்டப்படும்.) ★
— நேரில் தொடர்பு கொள்ளவும். —

ஞானம்ஸ் சைவ உணவகம்
கந்தசுவாமிகோவில் வீதி,
வவுனியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

உங்கள் உடல், உள்ளம், அறிவு, ஆன்மா ஆகியவற்றைப் பலவீனப்படுத்தும் எதையுமே விஷம் என்று ஒதுக்கித் தள்ளுங்கள். அதனுள்ளே வாழ்க்கை இல்லை. உண்மையும் இல்லை.

— விவேகானந்தர்


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
10.8.1987 த.பெ.இல: - 23


# பழி பாவம் தேடாதீர்!

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சகல மாவட்டங்களிலும் அனேகமாக இந்திய அமைதிப்படையினர் நிலைகொண்டு விட்டனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய தமிழ் மாவட்டங்கள் எல்லாவற்றிலுமே இப்போது இந்தியத் துருப்புக்களின் நடமாட்டம் ஆரம்பித்து விட்டது.

ஸ்ரீலங்கா அரச படைகள் நிலை கொண்டிருந்த முகாம்களிலேயே அநேகமாக இந்திய அமைதிப்படைகளும் குடி கொண்டிருக்கின்றன. இத்தகைய சில முகாம்களில் குறிப்பிட்ட ஒரு சத வீதமான ஸ்ரீலங்காப் படையினரும் இன்னமும் தங்கி உள்ளனர். கிழக்கில் உள்ள முகாம்களில் ஸ்ரீலங்காப் படையினர் பெருமளவில் உள்ளனர்.

அது ஒருபுறமிருக்க, இந்திய அமைதிப் படையினர் பல புதிய முகாம்களையும் அமைத்து வருகிறார்கள்.

மூவாயிரம் இந்தியத் துருப்புக்கள் மட்டும் அமைதிப் பணிக்காக இலங்கை வந்திருப்பதாகவும், மேலும் ஆயிரத்து ஐநூறு பேர் வருவர் என்றும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்தப் புள்ளி விவரம் கடந்த வாரம் தெரிவிக்கப்பட்டது. எனினும் வடக்கு, கிழக்கில் இதுவரை சுமார் பத்தாயிரம் இந்தியத்துருப்புக்கள் நிலைகொண்டுள்ளதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

துருப்புக்கள் மட்டுமன்றி பெரும் எண்ணிக்கையான கனரக வாகனங்களும், மற்றும் இராணுவத் தளபாடங்களும் இந்தியாவிலிருந்து வடக்கு, கிழக்குக்கு வந்துள்ளன. தொடர்ந்தும் வந்து கொண்டிருக்கின்றன.

அமைதிப் பணியை உறுதிப்படுத்தும் விதத்தில் வடக்கு, கிழக்கில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் வேலையையும் இந்தியத் துருப்புக்கள் ஆரம்பித்திருக்கின்றன.

இவற்றை எல்லாம் நோக்கும்போது, இந்திய அமைதிப்படையினர் நீண்ட காலம் இங்கு தங்கியிருக்கும் உத்தேசத்தோடு வந்திருப்பவர்களாகவே எண்ணத் தோன்றும்.

ஆனால் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்த கருத்து அந்த எண்ணத்துக்கு மாறாக இருக்கிறது.

இந்திய அமைதிப்படை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கேட்டுக் கொண்டதன் பேரிலேயே இலங்கை வந்திருக்கிறது என்றும் —

அவர் விரும்பும் நேரத்தில் அமைதிப்படை இந்தியா திரும்பி விடும் என்றும் — திரு. காந்தி கூறியிருக்கிறார்.

இந்த ஏற்பாடு தமிழர்களுக்கு மிகப் பாதகமானதாகும்.

தமிழ் மக்களுக்கும், போராளிகளுக்கும் பாதுகாப்பு அளிக்கும் பொறுப்பை, தான் ஏற்பதாகக், கூறியே இந்தியா, போராளிகளை ஆயுதங்களைத் திருப்பி ஒப்படைக்கச் செய்தது.

ஆயுதங்களைப் போராளிகளிடம் இருந்து முற்றாகப் பெற்றுக் கொண்டதும், அமைதிப் படைகள் தேவையில்லை போகலாம் என்று இலங்கை ஜனாதிபதி கூறக்கூடும். அவ்வேளை இந்தியத் துருப்புக்கள் போய்விடுமா? திரு. ராஜீவ் காந்தி கூறியது உண்மையானால் இந்தியத் துருப்புக்கள் திரும்பிச் செல்லவே செய்யும்.

அதன் பின்னர் ஸ்ரீலங்காப் படைகள் மீண்டும் வடக்கு, கிழக்கில் குடிகொள்ளலாம். இந்திய இராணுவம் புதிதாக அமைத்த முகாம்களிலும் ஸ்ரீலங்காப்படைகள் குடியேறும். அதாவது ஊருக்கு ஊர் ஸ்ரீலங்கா அரச படைகளின் முகாம்கள் வந்துவிடும்.

அப்படி ஒரு நிலை ஏற்படின், கடந்த நான்கு வருடங்களாக இருந்ததை விட மிகவும் மோசமான இராணுவத் தர்பாருக்கு இடம் கொடுத்ததாக முடியும்.

போராளிகளும் நிராயுத பாணிகளான நிலையில் எதுவும் செய்ய முடியாத இக்கட்டான சூழ்நிலை ஏற்படும். இது சட்டியில் இருந்து அடுப்புக்குள் விழுந்த நிலையை ஒக்கும். தமிழர்களை முற்றாகப் பொசுக்கவும், அவர்களை அடிமைகளாக்கவும் மிகச் சுலபமான வழி துறையை அரசுக்கு உண்டாக்கும்.

எனவே ஜே. ஆர். கேட்டபோது வந்தோம், அவர் சொன்னதும் செல்வோம் என்ற நிலைப்பாட்டை இந்தியா கடைப்பிடிக்கக் கூடாது.

தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளக்கூடிய ஸ்திரமான அரசியல் நிர்வாக அமைப்புகள் உருவாகிய பின்னரே தமிழ் மண்ணில் உண்மையான அமைதி தோன்ற முடியும்.

அதன் பின்னரே இந்தியத் துருப்புகள் இங்கிருந்து செல்ல வேண்டும். அதற்கு முன்னதாக எந்தக் கட்டத்தில் திரும்பிச் சென்றாலும் அது தமிழர்களை ஏமாற்றி, அவர்கள் அழிவுக்கு உதவிய பழியையும் பாவத்தையும் பாரதத்தின் மேல் அள்ளிக் கொட்டும்.

## பிரிட்டனில் இணையும் கட்சிகள்

லண்டன், ஆக. 9

லிபரல் கட்சியுடன் இணைவதற்கு சமூக ஜனநாயகக் கட்சியின் 57 சதவீதமான உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து சமூக ஜனநாயகக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து திரு டேவிட் ஓவன் ராஜினாமாச் செய்துவிட்டார்.

43 சதவீதமானோர் இணைப்பை எதிர்த்து வாக்களித்தனர்.

இணைப்பின் பின்னர் லிபரல் கட்சி, லிபரல் ஜனநாயகக் கட்சி என்று அழைக்கப்படும் என்று லிபரல் கட்சித் தலைவர் டேவிட் ஸ்ரீல் முன்னர் தெரிவித்திருந்தார். (உ-எ)

# அமெ. அரசுடன் நேரடிப் பேச்சு நடத்த நிக்கராகுவா தயார்!

## ஜனாதிபதி ஒட்டேகா அறிவிப்பு

மனகுவா, ஆக 9

இருநாட்டுஉறவுகளைச் சீர்ப்படுத்துவதற்காக அமெரிகாவுடன் நேரடிப் பேச்சு நடத்த நிக்கராகுவா அரசு தயார்.

—நிக்கராகுவா ஜனாதிபதி கேர்ணல் ஒட்டேகா இப்படி அறிவித்திருக்கின்றார்.

மத்திய அமெரிக்காவில் அமைதியை நிலைநாட்டுவதற்காக ஐந்து மத்திய அமெரிக்க நாடுகள் தயாரித்திருக்கும் திட்டம் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

நிக்கராகுவா கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுத உதவி வழங்குவதன் மூலம் மத்திய அமெரிக்க பிரதேசத்தில் அமைதியின்மையை அமெரிக்கா ஏற்படுத்தி வருகின்றது என்றும் அவர் கூறினார். மத்திய அமெரிக்காவில் அரசுக்கு எதிரான ஆயுத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு கௌதமாலாவில் ஐந்து நாடுகளின் தலைவர்கள் ஒன்று கூடி திட்டம் ஒன்றைத் தயாரித்திருக்கின்றார்கள்.

கொஸ்டரிக்கா, கௌதமாலா, எல்-சல்வடோர், ஹொண்டுரஸ், நிக்கராகுவா ஆகிய ஐந்து நாடுகளின் தலைவர்களே இந்தத் திட்டத்தைத் தயாரித்திருக்கின்றார்கள். (உ)

### மிகப்பெரிய கேக் விற்பனையில்!

சுவிஸ், ஆக. 9

உலகின் மிகப்பெரிய 'கேக்' கின் துண்டுகள் விற்கப்படுகின்றன.

ஒரு துண்டு 65 சதம் (ஒரு சுவிஸ் பிராங்க்).

மிகப்பெரிய கேக் என்று கின்னஸ் புத்தகத்தில் இது இடம் பெறப் போகின்றது.

கேக்கின் நீளம் 180 அடி. அகலம் 31 அங்குலம்.

ஐயாயிரம் துண்டுகளாக இந்தக் கேக் வெட்டப்பட்டு விற்பனையாகின்றது. இதனால் கிடைக்கும் பணம் வலது குறைந்தவர்களுக்கு வளமான வாழ்வு கிடைக்கப் பயன்படுத்தப்படும். (உ-எ)

## ரஷ்யா - இஸ்ரவேல் கூட்டுத் தயாரிப்பு

டெல் அவிவ், ஆக. 9

நகைச்சுவை நிறைந்த உளவுப் படம் ஒன்றைத் (Comedy Spy) தயாரிக்கும் கூட்டு ஒப்பந்தம் ஒன்றை இஸ்ரவேலும் சோவியத் யூனியனும் செய்து கொண்டுள்ளன.

இரண்டு நாடுகளின் உறவுகளில் ஏற்பட்ட புதிய திருப்பமாக இது அமைந்துள்ளதாம்.

படப்பிடிப்பு இரண்டு நாடுகளிலும் இடம் பெறும்.

சோவியத் நாட்டின் ஜோர்ஜியா மாநிலத்தைச் சேர்ந்த யூதர் அல்லாத ஒருவர் இஸ்ரவேல் வருகின்றார். பின்னர் சோவியத் உளவு ஸ்தாபனமான கே.ஜி.பியின் ஏஜன்ட் என்ற சந்தேகத்தின் பேரில் அவர் கைது செய்யப்படுகின்றார்.

இப்படித் திரைப் படக்கதை செல்கின்றது.

ஒப்பந்தம் சரியாக நிறைவேற்றப்பட்டால் படத்தை இயக்கும் சோவியத்டைரக்டர்ஆகஸ்ட் முடிவில் டெல் அவிவ் வருவார்— இப்படி இஸ்ரவேல் படக்கம்பெனி அதிகாரி கொல் சொன்னார். (உ-எ)

## பூமியதிர்ச்சியில் 6 பேர் பலி

சிலி, ஆக. 9

வடக்குப் பகுதியிலும் பெரு நாட்டின் தென் பகுதியிலும் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற பூமி அதிர்ச்சியில் குறைந்தது 6 பேர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய விடுதலைப் போர் நினைவுக் கொண்டாட்டம்

பம்பாய், ஆக. 10

'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் 45 ஆவது வருட நினைவுக் கொண்டாட்டங்கள் நேற்று ஞாயிறு காலை பம்பாய் ஆகஸ்ட் காந்தி மைதானத்தில் அங்கு ஏற்பாடு செய்துவைக்கப்பட்டது.

பிரதமர் ராஜீவ் காந்தி கொண்டாட்டங்களைத் தொடக்கிவைத்தார்.

ஆரம்பத்தில் பழம்பெரும் தேசிய விடுதலைத் தியாகி திருமதி அருணா ஆஸப் அலி மூவர்ணத் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். இதே மைதானத்தில் வைத்து 9-8-1942 இல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை மகாத்மா காந்திஜி தொடக்கினார். அப்போது மூவர்ணக் கொடியை இதே மைதானத்தில் ஏற்றி வைத்தவர் திருமதி அருணா ஆஸப் அலி என்பது குறிப்பிடத் தக்கது.

பின்னர் சுப்பிரமணிய பாரதியாரின் 'விடுதலை விடுதலை' சுதந்திரப் பாடல் இசைக்கப்பட்டது.

இன்று நாட்டின் முதலாவது பிரதமரான ஜவஹர்லால் நேருஜியின் 100 ஆவது பிறந்த தினமும் கொண்டாடப்பட்டது. (உ-எ)

வெளி உலகில்

## ஆந்திர முதல்வருக்கும் வருமான வரிப் பாக்கி!

### விரைவில் சட்ட நடவடிக்கை

புதுடில்லி, ஆக 9

முதலமைச்சர் என்.ரி ராமராவ் உட்பட 71 நடிகர், நடிகையர் வருமானவரி கட்டாது இருக்கின்றார்கள் என்று இந்திய நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது

நிதி இணை அமைச்சர் திரு. பி கே. காத்வி இத்தகவலை வெளியிட்டார்.

திரு. ராமராவ் வருமான வரியாக 1 லட்சத்து 36 ஆயிரம் டாலர் செலுத்த வேண்டும். இதை அறவிட சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பின்னணிப் பாடகரும் நடிகருமான கிஷோர் குமார் ஒரு லட்சத்து 97 ஆயிரத்து 600 டாலர் வரி செலுத்தவேண்டும்.

ஹிந்தி நடிகை ரேகா 4 லட்சத்து 72 ஆயிரம் டாலர் செலுத்த வேண்டும்.

—இப்படி இணை அமைச்சர் சொன்னார். (உ-எ)

# நாற்றிசையும் காவற் கோயில்கள் கொண்டமர்ந்த நல்லூர்க் கந்தன்

அமைப்புக்கும், அழகுக்கும் அர்ச்சனை பூசை ஒழுங்குகளுக்கும், கட்டுப்பாட்டுக்கும், தூய்மைக்கும் முதலிடம் வகிக்கும் சைவத்தருக் கோயில் நல்லூர் என்றால் மிகையில்லை.

இன்றுள்ள ஆலயத்தின் அமைப்பு பெரிதாகவும் அழகாகவும் அமைந்துள்ளது; கிழக்கு வாசலிலுள்ள பெரிய கோபுரம் 5 அடுக்குகள் கொண்டு அழகிய சிற்பக்கலைகளுடன் விளங்குகிறது; அதற்கு முன்னே மிகவும் அலங்காரமான மண்டபம்; தெற்கு நோக்கிய ஆறுமுக சுவாமி வாசலிலும் பெரியதொரு கோபுரம். கோயிற்பூசைகள் நடைபெறும் வெவ்வேறு வேளைகளில் ஒலிப்பதற்கு இனிய நாதமுள்ள ஆறு மணிகள்.

**சு சந்திரமோகன்**

இங்குள்ள தேருக்கும் தேரடிக்கும் பழைய வரலாறுகள் உள்ளன.

இங்கே முன்னர் ஒரு பெரிய வில்வமரம் நின்றது. தேரடியில் வயிரவ சுவாமி எழுந்தருளியுள்ளார் என்பது நம்பிக்கை.

நல்லூரிலுள்ள பழைய தேர் உருக்குலையாது இருந்தபோதிலும் அது வீதி வழியே இழுப்பதற்கு உதவாது எனக் கண்டு 1964 ஆம் ஆண்டில் ஒரு பெரிய சித்திரத்தேர் செய்தார்கள். அருமையாக அமைந்துள்ள புதிய தேரை நிறுத்துவதற்கான தேர் மண்டபம் 1974 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

**நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்**

இன்று நாம் வணங்கும் நல்லூர் ஆலயம் ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன் இரகுநாத மாப்பாண முதலியாரால் சிரமைக்கப்பட்டது. அதன் பின் ஆறுமுகமாப்பாண முதலியாரால் விஸ்தரிக்கப்பட்டு 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இக்கோயில் ஓரளவு நிறைவு பெற்றது. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 1902 ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் 1909 ஆம் ஆண்டு மண்டப, சுற்றுப்பிரகார வேலைகள் நடைபெற்றன.

மணிமாட அயோத்தி போல சிறந்து விளங்கும் நல்லூரில் கோயில் கொண்டருளிய முருகனின் அளவில்லாக் கொடையால் உய்தி பெற்றவர்கள்பலர்.

சிங்கைப்பரராசசேகரனின் ஆட்சியிலே நல்லூரைச் சுற்றி நாற்றிசைகளிலும் காவற்கோயில்கள் அமைக்கப்பட்டன. வடக்கில் சட்டநாதர் ஆலயமும், கிழக்கில் வெயிலுகந்த பிள்ளையார் ஆலயமும், தெற்கில் கைலாசநாதர் ஆலயமும், மேற்கில் வீரமாகாளி அம்மன் ஆலயமும் அமைக்கப்பட்டன.

தன்னிடம் தஞ்சம் அடைபவர்களுக்குஅருள் புரியும் நல்லூர்க் கந்தனின் திருப்பாதங்களை நாமும் சென்றடைவோம்.

## கிளிநொச்சியில் வரட்சி நிவாரணம்

### 12,500 குடும்பங்களுக்கு

கிளிநொச்சி, ஆக. 10

வரட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 12 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு ஐந்து மாத காலத்திற்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந் நிவாரணத்திற்காக மாதாமாதம் அரிசி, மா என்பனவற்றை வழங்க சமூக சேவைத் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

இந்நிவாரணம் விவசாயக் கூலிக் குடும்பங்களுக்கும், குறைந்த அளவிலான விவசாயக் காணிச் சொந்தக்காரர்களுக்குமே வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5 நபர்களுக்கு கூடிய குடும்பம் ஒன்றுக்கு மாதம் சுமார் 10.5 கிலோ பொருள்கள் வழங்கப்படும்.

இப்பொருள்கள் கிராம சேவகர்கள் மூலம் இம் மாதம் முதல் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-76)

### இந்திய நிவாரணம்

சாவகச்சேரி, ஆக. 10

சாவகச்சேரி ப. நோ. கூட்டுறவுச் சங்கம் சாவகச்சேரிவடக்கு. மீசாலைப் பகுதிகளில் உள்ள ஐந்து கிளை நிலையங்களில் இந்திய நிவாரண உதவிகளை வழங்கியது.

உதவி அரசாங்க அதிபர் திரு பூ. சுந்தரம்பிள்ளை இந்து யசெஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகள் திரு. குப்தா, திரு. சகிக்கல், யாழ். செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திரு. குணரத்தினம், இலங்கை செ.சி.ச.பிரதிநிதி திரு. பொல் ஜெயதிலகா, ப. நோ. கூ. ச. இயக்குநர் திரு. எஸ். வைத்திலிங்கம் ஆகியோர் சமுகமளித்து விநியோகத்தைத் தொடக்கி வைத்தனர். (இ-31)

**பொய்யாமொழி**



குறள்:

கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும்.

பொருள்:

பொருள் கொடுத்தலும் இன்சொல் கூறுதலுமாகிய இரண்டும் செய்யவல்லவனானால், ஒருவன் தொடர்ந்த பல சுற்றத்தால் சூழப்படுவான்.

## வாசகர் திருமுகம்

### தமிழக, மத்திய அரசுகளின் பொறுப்பு

இலங்கை — இந்திய அரசுக்கிடையே ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தப்படி பின்வரும் முடிவுகள் தவிர்க்கமுடியாததாகின்றன

1. ஒற்றையாட்சியின் கீழ் — ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் — ஏற்படவிருக்கும் வடக்கு கிழக்கு இணைப்பும் அதன் நிர்வாகமும் தமிழரின் பூரண சுயாதிபத்திய உரிமையை மழுங்கடிப்பதுடன் கிழக்கு மாகாணத்தில் நடத்தப்படவிருக்கும் அபிப்பிராய வாக்கெடுப்பு எமது இனத்தைக் கூறுபோடும் ஓர் எத்தனமாகவே அமைகின்றது.

2. இந்த ஒப்பந்தத்தில் வடக்குக் கிழக்கிலுள்ள இராணுவ விலக்கல் பற்றி எதுவும் கூறப்படாது மௌனம் சாதிப்பதன் மூலம் எமது மாநிலத்தில் சிங்கள இராணுவத்துக்கு நிலையான இடம் கொடுக்கப்பட்டிருப்பதுபோல் தெரிகிறது.

3 ஆயுதங்களை ஒப்படைக்க நிர்ப்பந்திப்பதன் மூலம் எமது எதிர்ப்புச் சக்தி முறியடிக்கப்படுவதுடன் எமது பாதுகாப்பும் பலவீனப்படுத்தப்படுகிறது. இதன் விளைவாக நாம் எப்பொழுதும் இந்தியாவிலேயே தங்கியிருக்கவேண்டியவர்களாக்கப்படுகிறோம்.

4. திரு ஜெயவர்த்தன நாடாளுமன்றத்தைக் கலைத்து தானே ஏகதேச்சாதிகாரமாகச் செயல்படப் போவதாக அறிவித்துள்ளது அவர் தன்னைத் தானே சர்வாதிகாரியாகப் பிரகடனப்படுத்தும் முயற்சியை வெளிப்படுத்துகிறது.

இதுகாறும் இரத்தம் சிந்தி, உயிர்த்தியாகம் செய்து, பல இன்னல்களுக்கிடையே எம் இனத்தைப் பாதுகாத்து வந்த எமது வீரத்தியாகிகளின் நிலைமை தெளிவாக்கப்படவில்லை

எனவே ஈழத் தமிழ் மக்களின் வரலாற்றுப் பாரம்பரிய உணர்வுகளையும், ஜனநாயகப் பண்பையும் மதித்து — இதை இடைக்காலத் தீர்வாகக் கருதி — நாம் எமது முடிவான இலட்சியத்துக்கு எம்மை இட்டுச் செல்லும் எமது வலிமையைக் குறைக்காமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு தமிழ் நாட்டரசையும் இந்திய அரசையும் சார்ந்ததாகும்.

மு: மகாலிங்கம்
சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.

கண்ணகை அம்மன் கோவிலடியில்

## இறங்கு துறைப்பாலம்

அனலைதீவு, ஆக. 10

அனலைதீவு, எழுவைதீவு மக்களின் கடல் போக்குவரத்துக்காக மூன்றரை லட்சம் ரூபா செலவில் கரம்பன் கண்ணகை அம்மன் கோவிலடியில் ஓர் இறங்கு துறைப் பாலம் அமைக்கப்பட்டு வருகிறது.

நானூறு அடி நீளமான இப்பாலத்தில் இருநூறு அடி தூர வேலைகள் பூர்த்தியாகி விட்டன

மிகுதி இருநூறு அடி தூர வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

இந்த வேலைகள் பூர்த்தியாகும் பட்சத்தில் அனலைதீவு, எழுவைதீவு மக்களின் நீண்டகால பிரயாணக் கஷ்டங்கள் குறைந்துவிடும். (இ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடாபாக்கு, கொப்பரு, தாம்பூல கேசரி, கஸ்தூரிமஞ்சள், இந்தியன் பட்டுத் துண்டுகள், சிங்கப்பூர் குங்கிலியம், தாய்வான் குங்குலியம், சுத்தமான தேன், நெய், நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய், வேப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய் தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
இல. 4, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

10 - 08 - 1987 திங்கட்கிழமை

பீடாபாக்கு, கொப்பரு, தாம்பூல கேசரி, கஸ்தூரிமஞ்சள், இந்தியன் பட்டுத் துண்டுகள் சிங்கப்பூர் குங்கிலியம், தாய்வான் குங்கிலியம், சுத்தமான தேன், நெய், நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய் வேப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய் தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

**க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
இ. 4, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

### ஸ்ரீலங்கா இராணுவம் நிலைகொண்டிருந்த

# முகாம்களுக்கு அருகில் உள்ள வீடுகளில் திருடர் கைவரிசை

யாழ்ப்பாணம், ஆக. 10

ஸ்ரீலங்கா படையினர் முகாமிட்டிருந்த இராணுவ முகாம்களுக்கு அண்டிய பிரதேசங்களில் உள்ள வீடுகளில் கொள்ளையரின் கைவரிசை ஓங்கியிருப்பதாகப் புகார் கூறப்படுகிறது.

குறிப்பாக வடமராட்சி, காங்கேசன்துறை, மாவிட்டபுரம், குரும்பசிட்டி, புன்னாலைக்கட்டுவன், யாழ் கோட்டைப் பகுதிகளில் உள்ள வீடுகளில் மிச்சம் மீதி இருந்த உடைமைகளும் களவாடப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே இராணுவத் தாக்குதல்களினால் அதிகளவு கட்டடங்கள் தரைமட்டமாகிவிட்டன. சில கட்டடங்கள் அரைகுறையாக உடைக்கப்பட்டுள்ளன.

இன்னும் சில வீடுகள் சேதமடையாமல் இருக்கின்றன.

இப்பகுதிகளில் அரைகுறையாக உடைந்து கிடக்கும் வீடுகளிலுள்ள கதவுகள், ஜன்னல்கள், நிலைகள், தளபாடங்கள் என்பனவும் —

உடைக்கப்படாத வீடுகள் உடைக்கப்பட்டு அங்குள்ள பெறுமதிமிக்க பொருள்களும் களவாடப்பட்டு வருவதாகவும் பரவலாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இதேசமயம் கடந்த 7-ஆம் திகதி இரவு காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையின் உத்தியோகத்தர்கள் விடுதிக்குள் புகுந்த இனந் தெரியாத நபர் ஒருவர் கண்ணி வெடியில் சிக்குண்டு மரணமானார்.

இவர் அந்த விடுதியில் களவெடுக்கச் சென்றிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இதுபோலவே குரும்பசிட்டிப்பகுதிக்கு இரவு நேரத்தில் சென்ற ஒருவர் அங்கிருந்த பொறி வெடியில் சிக்குண்டு காலை இழந்தார். (உ-ஓ-7)

## கிளிநொச்சி --- காங்கேசன் ரயில் பாதை திருத்தப்படும்

கொழும்பு. ஆக. 10

கிளிநொச்சி — காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதையைத் திருத்தஞ் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய ரயில் சேவைகள் மீண்டும் வழமை போல் இயங்கத் தொடங்கி விட்டன என்று ரயில்வேகட்டுப்பாட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை கொழும்பு —திருகோணமலைரயில் சேவை இன்னும் மூன்று தினங்களில் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

### நேற்றும் ஒருவர் காலை இழந்தார்

யாழ்ப்பாணம், ஆக. 10

சட்டுவன் பகுதியில் வீடு பார்க்கச் சென்றவர்களில் நேற்றும் ஒருவர் மிதிவெடியில் சிக்கித் தனது காலை இழந்தார்.

மற்றொருவர் படுகாயமடைந்தார்.

இவ்வாறு மிதிவெடியில் சிக்கி காலிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்றுடன் 17ஆக அதிகரித்துள்ளது. (உ-10)

## அம்பாறைப் பகுதியில் இராணுவக் கெடுபிடி!

யாழ்ப்பாணம், ஆக. 10

இந்திய இராணுவத்தினரின் வருகையின் பின்னர் அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவப்படையின் கெடுபிடிகள், அட்டகாசங்கள் அதிகரித்திருப்பதாக போராளி அமைப்பு ஒன்று தெரிவித்திருக்கிறது.

அம்பாறை, தாண்டியடி, திருக்கோவில், அக்கரைப்பற்று முகாம்களைச் சேர்ந்த சிப்பாய்கள் பொதுமக்களின் மேல் மோசமான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். பஸ் பயணிகள் வழி மறிக்கப்பட்டு தாக்கப்படுகிறார்கள்.

கைதானவர்களை உறவினர்கள் பார்வையிடச் சென்றபோது கைதிகளின் கைகள், கால்கள் முறிந்த நிலையிலும் இரத்தக்கறை படிந்த உடுப்புக்களுடனும் இருக்கக் காணப்படுகின்றனர்.

சனியன்று உகந்தைக் கோவில் என்னும் பகுதியில் கோவிலுக்குச் சென்று கொண்டிருந்தவர்கள் மிக மோசமாக தாக்கப்பட்டுள்ளனர்.

அறுகம்பை முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் சனி மாலை அப்பகுதி முஸ்லிம் மக்களை பலவந்தப்படுத்தி ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளார்கள்.

இவ் ஊர்வலத்தில் பெரும் எண்ணிக்கையான வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதுடன் கைக்குண்டுப்பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. மக்களுக்கு இடையில் வெடி கொளுத்திப் போடப்பட்டது.

—இவ்வாறு மேற்படி போராளி இயக்கம் தெரிவித்தது (●)

நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு

★ உதயன் நடத்தும் ★

**அதிர்ஷ்டப் பயணப் போட்டி-87**

★ யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரை சொகுசுபஸ் பயணம்

★ கொழும்பு கிறீன்லன்ட்ஸ் ஹோட்டலில் ஒருநாள் ஓய்வு

★ எயர்லங்கா விமானத்தில் இருவருக்கு பழனி போய்-வரும் பயணச்சீட்டு

★ பழனியில் உயர்தர ஹோட்டலில் தங்கும் வசதி

★ பழனி முருகனை 3 நாட்கள் தங்கி வணங்கும் பாக்கியம்.

★ கைச்செலவுக்கு 50 அமெரிக்க டொலர்கள்.

● 2ஆம் 3ஆம் பரிசுகளாக தங்க மோதிரமும், காஞ்சிபுரம் பட்டுச்சேலையும்.

**இவற்றைப் பெறப்போகும் அதிர்ஷ்டசாலிகள் யார்?**

அந்த அதிர்ஷ்டசாலி நீங்களாகவே இருக்க, செய்யவேண்டியது இவ்வளவு தான்.

1. நாளை முதல் உதயன்-சஞ்சீவி பத்திரிகைகளில் வெளியாகும் 'அதிர்ஷ்டப் பயணப் போட்டி 87' கூப்பன்களை கத்தரித்து எடுக்கவேண்டும்.
2. கூப்பன்களில் உள்ள கேள்விகளுக்குப் பொருத்தமான விடைகளை அதற்கு என ஒதுக்கப்பட்ட இடத்தில் எழுத வேண்டும்.
3. உங்கள் பெயர் முகவரியை தகுந்த இடங்களில் நிரப்பிக் கூப்பனை நல்லூர் வீதிகளில் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலோ அல்லது தபால் மூலம். ''அதிர்ஷ்டப் பயணப் போட்டி 87'' உதயன் பணிமனை, 292/2. நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அனுப்பி வைக்கவேண்டும்.
4. உதயன் ஸ்தாபனத்தில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்கள்குடும்பத்தினரும் இந்த போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

● (நேற்றைய உதயனில் அறிவித்தபடி கூப்பன் இன்றைய உதயனில் வெளியாகவில்லை. நாளை முதல் இக்கூப்பன் வெளியாகும்)

### ஒப்பந்தத்தை --

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சந்தேகத்துக்கு உரியது.

ஆகையால், ஒப்பந்தச் சட்ட நகலை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு முன்னர் அரசமைப்புச் சட்டத்தை திருத்தும் முயற்சி அரசாங்கம் எதிர்நோக்கும் பெரிய ''கண்டமாக'' இருக்கும் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

★ வடங்கு, கிழக்கை தமிழரின் தாயகமாக அங்கீகரித்தல்.

★ தமிழையும் ஆங்கிலத்தையும் உத்தியோக மொழிகளாக்குதல்.

— ஆகிய அம்சங்கள் உட்பட மற்றும் பல விடயங்களைச் சட்டமாக்குவதற்கு அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று சட்ட நிபுணர் வட்டாரங்கள் சுட்டிக்காட்டி உள்ளன

இதே வேளை, மாகாண சபைச்சட்டநகலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் முன்னர், இந்திய—இலங்கை ஒப்பந்தத்துக்கு ஏற்ப அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதி திரு ஜெயவர்த்தன நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

மாகாணசபைச் சட்ட நகல் அடுத்த செப்டம்பர் கடைசியில் அல்லது அக்டோபரில் தான் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் திரு. ஜெயவர்த்தன அந்தப் பேட்டியில் தெரிவித்திருக்கிறார். (அ-எ)

### நோர்வே----

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இன்றுகாலை வடமராட்சிக்கு அழைத்துச்சென்று அங்கு ஆஸ்பத்திரி உட்பட பாதிக்கப்பட்ட இடங்களைக் காண்பிப்பார்கள்.

யாழ் நகர், தெல்லிப்பளை. மாவிட்டபுரம் ஆகிய இடங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும் அவர்கள் பார்வையிடுவார்கள்.

பின்னர் யாழ் ஆஸ்பத்திரிக்கு அவர்கள் விஜயம் செய்வர்.

இன்று மாலை யாழ் செஞ்சிலுவைச் சங்கச் செயற்குழுவையும் இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளையும் ஞானம்ஸ் ஹோட்டலில் உள்ள அலுவலகத்தில் அவர்கள் சந்தித்து உரையாடுவர். (உ)

உடுப்பிட்டி, நாவலடியில்

## காணிகளின் எல்லைகளை தேடும் மக்கள்!

வடமராட்சி, ஆகஸ்ட் 10

உடுப்பிட்டி, நாவலடிப் பகுதி மக்கள் தமது காணிகளின் எல்லைகளைத் தேடுகின்றார்கள்.

உடுப்பிட்டி பொலீஸ் நிலையத்தை ஸ்தாபிப்பதற்க சுமார் ஐந்து ஏக்கர் விஸ்தீரணமான இடத்தில் உள்ள பல வீடுகளையும் கடைகளையும் ஸ்ரீலங்கா இராணுவம் புல்டோசர்கள்மூலம் இடித்துத் தரைமட்டமாக்கியிருந்தது

தற்போது இந்திய சமாதானப்படை வந்ததைத் தொடர்ந்து தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற அப்பகுதி மக்கள் அதிர்ச்சியடைந்திருக்கின்றனர்.

தங்கள் வீடுகள் தரைமட்டமானதுடன் தமது காணி எல்லைகள்கூடத் தெரியாமல் ஒரே சம தரையாகக் கிடப்பது கண்டே அவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

தற்போது தமது காணிகளின் எல்லைகளைத் தேடும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். (உ-160)

## ஜே. ஆர். தோற்கடிக்கப்பட்டால் ஒப்பந்தத்தின் நிலை என்ன?

### வாஜ்பாய் கேட்கின்றார்

சண்டிகார், ஆக. 10

ஜனாதிபதி ஜெயவர்த்தனவை மக்கள் தோற்கடித்தால் அல்லது அரசியலில் இருந்து அகற்றிவிட்டால் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் நிலை என்ன?

பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் மேற்கண்டவாறு கேட்டார்.

திரு. வாஜ்பாய் மேலும் சொன்னதாவது:

ஒப்பந்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் எதிர்கின்றது இந்த நிலையில் யுத்த நிறுத்தம் —அமைதி காக்கும் பணி ஆகியவற்றுக்கு இந்தியா உத்தரவாதம் அளித்துள்ளது ஆயினும் இலங்கை துண்டாடப்படுவதற்கு இந்தியாவினால் உத்தரவாதமளிக்க முடியாது.

இந்திய உத்தரவாதம் என்பது இந்திய அமைதிப் படையினர் தமிழர்களைச் சுடுவதாகவும் இருக்குமா என்று நான் ஆச்சரியப்படுகிறேன்.

சக்தி மிக்க பௌத்த மதபீடம், சிங்கள மக்கள்-பகிரங்கமாகஇல்லாவிடினும்-ஒப்பந்தத்துக்கு தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளனர்.

இதனால் தேவையான ஆதரவைஒப்பந்தத்துக்கு திரு. ஜெயவர்த்தனவினால் பெற்றுக்கொள்ள முடியுமா?

ஒரு நிர்வாக அமைப்பாக வடக்கு—கிழக்கு மாகாணங்கள் இணைந்த பின்னர் பொலீஸைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் யாருக்கு இருக்கும் என்பதை ஒப்பந்தம் தெரிவிக்கவில்லை.

உண்மையான பிரச்சினை யார் கவர்னர், யார் முதலமைச்சர் என்பதல்ல; உண்மையான அதிகாரம் மநில அரசுக்கு இருக்குமா அல்லது மத்திய அரசுக்கு இருக்குமா என்பதே.

இப்படி திரு வஜ்பாய் சொன்னார். (உ-எ)

## ● பிளவு இல்லையாம்

கொழும்பு, ஆக. 10

இலங்கை—இந்திய ஒப்பந்தம் குறித்து அரசாங்கத்தில் பிளவு இல்லை.

இவ்வாறு ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தன நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மாறவில்லை என்றும்—

வடக்கு, கிழக்கில் சட்டத்தையும் ஒழுங்கையும் பராமரிப்பதிலும் இந்தியத் துருப்புகள் உதவும் என்றும்—

முழுக்க முழுக்க தமது பணிப்பின் கீழேயே அவை செயற்படுவதாகவும் ஜனாதிபதி சொன்னார். (அ)

### 5 இடங்களில்---

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

பார்வையிட்டனர்.

யாழ் கோட்டை இராணுவ முகாமில் மிக நீளமான றொக்கட் லோஞ்சர் ஒன்றையும் புலிகள் நேற்றுமாலை ஒப்படைத்தனர்.

ஆயுத ஒப்படைப்பு வேலைகள் தொடர்ந்தும் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## தூதரக அதிகாரிகள் யாழ் ஆஸ்பத்திரியை பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், ஆக. 10

அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளின் தூதரகங்களைச் சேர்ந்த உயரதிகாரிகள் குழு நேற்று யாழ் ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்தது

அண்மைக்காலத்தில் கோட்டை இராணுவத்தினர் நடத்திய தாக்குதல்களினால் சேதமடைந்திருந்த யாழ். ஆஸ்பத்திரிக் கட்டடங்களை தூதரக அதிகாரிகள் வெகு உன்னிப்பாகப் பார்வையிட்டனர்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அதிகாரிகள் யாழ்நகரில் இராணுவத் தாக்குதல்களுக்கு இலக்கான இடங்களையும் பார்வையிட்டு சேதவிவரங்களை அறிந்து கொண்டனர்

காங்கேசன்துறைப்பகுதிக்கும் நேற்று தூதரக அதிகாரிகள் விஜயம் செய்தனர்.

நாளை இவர்கள்கொழும்பு திரும்பலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. (உ-10)

### நல்லூர்க் கந்தன் வெளி வீதி உலா

யாழ்ப்பாணம், ஆக. 10

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் பத்தாவது தினமான நேற்று மஞ்சத்திருவிழா வெளி வீதி உலாவுடன் வெகு சிறப்பாக நடைபெற்றது.

பெரும் எண்ணிக்கையான முருகனடியார்கள் நேற்று ஆலயத்தில் வந்து கூடினர்.

முதல் 9 நாள் உற்சவங்களின்போதும் உள் வீதியுலா மட்டுமே நடைபெற்றது. (உ-7)

### ஊர்காவலர்- - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கிப் பிரயோகம் செய்ததில் தமிழ்ச் சிறுவன் ஒருவன் உயிரிழந்ததும் பத்துப் பேர் காயமடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது (உ-எ)

## ஊர்காவல் படை கிழக்கிலிருந்து வாபஸாகும்

### சிறில் ரணதுங்கா தகவல்

கொழும்பு, ஆக. 10

கிழக்கு மாகாணத்தில் இருந்து ஊர்காவல் படையை வாபஸ் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு கூட்டுப் படைத் தளபதி லெப். ஜெனரல் சிறில் ரணதுங்கா தெரிவித்தார்.

தமிழ்ப் போராளிகள் தமது ஆயுதங்களை ஒப்படைப்பதில் சில சிக்கல்கள் உள்ளதை நாம் உணர்கிறோம்.

ஆயுதங்களை ஒப்படைத்த பின் தமது பாதுகாப்புக்கு கிழக்கில் ஊர்காவல் படையினர் போன்றவர்களால் குந்தகம் ஏற்படலாம் என அவர்கள் அஞ்சுகிறார்கள். அது நியாயமானது என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

போராளிகள் ஆயுதங்களை ஒப்படைப்பதில் உள்ள சிக்கல்களை ஆராய்வதற்காக வடக்கு, கிழக்கில் உள்ள எமது இணைப்பதிகாரிகள், இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் ஆகியோர் கொண்ட மாநாடு ஒன்றை நடத்தினோம்.

முன்னர் தெரிவு செய்யப்பட்ட சில இடங்களில் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைப்பதாக ஏற்பாடாகி இருந்தது

ஆனால் அவர்கள் அறிவிக்கும் இடங்களுக்கு நாம் சென்று ஆயுதங்களைப் பெறவும் இப்போது ஏற்பாடாகி உள்ளது.

இவ்வாறு லெப் ஜெனரல் தகவல் வெளியிட்டார். (அ)

### 'பாரத ரத்ன' விருது

புதுடில்லி, ஆக 10

பாரதத்தின் அதி உயர் விருதான 'பாரத ரத்ன' விருது எல்லைக் காந்தி கான் அப்துல் கபார் கானுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டவர் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

### இன்றைய பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஆக.10

ஜீ சி ஈ உயர்தரப் பரீட்சையில் இன்று நடைபெறும் பாடங்கள் :-

காலை 8 30 - 10 30:- தாவரவியல் பகுதி I

காலை 8.30 - 11 30:- தமிழ் பகுதி 1

நண்பகல் 12 30 - 3 30 தூயகணிதம் பகுதி II

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் உள்ள

**உதயன் — சஞ்சீவி**

விற்பனையாளர்களுக்கு ஒரு

**நற்செய்தி**

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் உதயன், சஞ்சீவி பத்திரிகைகளின் விநியோகத்தைச் சீர்செய்யும் முகமாக எமது மாநகரசபை எல்லைக்குள்ளான விநியோகத்தை 'அருண்மார்க்கட்டிங் சேவிஸர்ஸ்' ஸ்தாபனத்தாரிடம் ஒப்படைத்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம். யாழ் மாநகரசபை எல்லைக்குள் உதயன் விற்பனையாளர்களாக விரும்புவோர் காலை 8-30 மணிக்கும் பிற்பகல் 3-00 மணிக்கும் இடையில் கீழ்க்கண்ட விலாசத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

முகாமையாளர்
**அருண் மார்க்கட்டிங் சேவிஸர்ஸ்**
15, 2ஆம் ஒழுங்கை
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் உள்ள எமது தற்போதைய விற்பனையாளர்களும், முகவர்களும் அருண் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி
உதயன் பப்ளிகேஷன்ஸ் பிறைவேட் லிமிட்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 10-08-1987

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. at 292/2 Navalar Road, Jaffna on Monday August 10, 1987.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org